
மலர் 7 இதழ் 12

சிறுவர் மாத இதழ்

# வெற்றிமணி



## வாழ்வளிக்க வந்தனள்

அன்போங்கி உலகமெலாம்
ஆட்சிசெய்ய வந்தனள்
பண்போங்கிப் பார்முழுதும்
பரிமளிக்க வந்தனள்

அறிவோங்கி அடக்கமுடன்
வழிநடத்த வந்தனள்
நெறியோங்கி நேர்மையுடன்
நிலைவளர்க்க வந்தனள்

தொழிலோங்கி ஆர்வமுடன்
துயர்துடைக்க வந்தனள்
வழிகாட்டிச் சித்திரையாள்
வாழ்வளிக்க வந்தனள்!

— வி. கந்தவனம்

கௌரவ ஆசிரியர்:

15-4-70 மு. க. சுப்பிரமணியம் சதம் 30

நங்கையர் விரும்பும் நவநாகரீக
★ நகைகளுக்கும் ★ வைரங்களுக்கும்
புகழ்பெற்று விளங்கும் ஸ்தாபனம்

# கே.என்.எம்.மீரான் சாஹிப்

''தங்கப்பவுண் நகை மாளிகை''

கன்னாதிட்டி தொலைபேசி: 585 யாழ்ப்பாணம்

*Visit*

## K. N. M. MEERAN SAHIB

JEWELLERS & DIAMOND MERCHANT

"SOVEREIGN PALACE"

**KANNATHIDDY** *Dial*: 585 **JAFFNA**

● சுத்தம் சுகம் தரும்!

★ 'மில்க் வைற்' வெண்மை தரும்!!

○ கந்தையானாலும் கசக்கிக் கட்டுங்கள்!

துரித சலவைக்கு

மில்க்வைற் சலவைப்பவுடரை வாங்கிப் பாவியுங்கள்!


மில்க்வைற் சோப் மேலுறைகளை

அனுப்பிப் பரிசுகளைப் பெறுங்கள்!

**மில்க்வைற் சோப் தொழிற்சாலை**

யாழ்ப்பாணம்.

தொலைபேசி: 7233



கௌரவ ஆசிரியர்: மு. க. சுப்பிரமணியம்

# வெற்றிமணி

## வருடச் சந்தா

பொங்கல் மலர்
தபாற் செலவுட்பட

| | | |
|---|---|---|
| இலங்கை | ரூபா | 4-00 |
| இந்தியா | ரூபா | 4-00 |
| மலாயா | $ | 4-00 |

## விளம்பர விகிதம்

| | | |
|---|---|---|
| வெளி அட்டை | ரூபா | 75-00 |
| உள் அட்டை | ரூபா | 60-00 |
| முதற் பக்கம் | ரூபா | 50-00 |
| உட் பக்கம் | ரூபா | 40-00 |

தொடர்ந்து விளம்பரஞ்செய்யின் 15 வீதக் கழிவுண்டு.

விபரங்களுக்கு எமக்கு எழுதுக.

வெற்றிமணி
253 1/1 ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம். (இலங்கை)

## பொருளடக்கம்

| | |
|---|---|
| தலையங்கம் ... ... ... | 3 |
| வண்டே நீ என்ன கண்டாய்? | 4 |
| ஐரோப்பா — அறிமுகம் ... | 6 |
| திரை மலர் ... ... ... ... | 8 |
| விந்தைச் செய்திகள் ... ... | 8 |
| கணக்கியலுக்கோர் அறிமுகம் | 9 |
| ஈழகேசரிப் பொன்னையா ஞாபகார்த்தப் பேச்சுப் ... | 13 |
| பேறு நண்பர் சங்கம் ... ... | 14 |
| நேயர் குரல் ... ... ... ... | 14 |
| சந்தா ... ... ... ... ... | 15 |
| மதிப்புரை ... ... ... ... ... | 15 |
| ஆசிரியர் பதில் ... ... ... ... | 16 |
| கவிதை அரங்கம் ... ... ... | 17 |
| தெரியுமா? ... ... ... ... | 20 |
| டிக்சனின் கொள்கை ... ... | 21 |
| சர்க்கஸ் பொம்மை ... ... | 23 |
| பாரதியார் பிறந்ததால் ... ... | 26 |
| தம்பிக்கு! ... ... ... ... ... | 28 |
| அவனியின்கண் அரும்பெரும். | 30 |
| மாணவர் மன்ற அங்கத்தவர் | 31 |

— வெற்றிமணி —

வெற்றிமணி டாண் எனவே விண்முட்ட ஒலித்திடுவாய்
நற்றமிழாம் எங்கள் மொழி நலமுற ஒலித்திடுவாய்.

மலர் 7 | 15-4-70 புதன்கிழமை | இதழ் 12

# ஒரு வேண்டுகோள்

வெற்றிமணி 15-4-70 இதழ் தொடக்கம் தமிழ்மணம் கமழும் யாழ்ப்பாண நகரிலிருந்து வெளி வருகிறான். இந்த இதழுடன் வெற்றிமணி ஏழு ஆண்டுகளைப் பூர்த்தி செய்துள்ளான். புதிய இடத்திலிருந்து புதுப் பொலிவுடன் வெளிவரும் என உறுதி கூறுகிறோம். திரை மலர், விந்தைச் செய்திகள், தெரியுமா, ஆசிரியர் பதில் என்ற புதுப்பகுதிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

சிறுவர்களின் அறிவு வளர்ச்சிக்கும், பண்புநிறை வாழ்வுக்கும் அரிய தொண்டாற்றிவரும் வெற்றிமணியை ஆதரிப்பது தமிழ் மக்களின் கடமையாகும். ஆபாசச் செய்திகளும் அருவருக்கத்தக்க விஷயங்களும் நிறைந்த பத்திரிகைகளை வாங்கிப் படித்த பழக்கமுள்ள பல மாணவர்கள் இப்போ அவற்றைவிட்டு வெற்றிமணியைப் படிப்பதைக் கண்டு அக மகிழ்கின்றோம். பாடசாலைகளில் ஆசிரியர்கள் வகுப்பு மாணவர்களுக்கு வெற்றிமணியிலுள்ள கட்டுரைகளை வாசித்துக் காட்டுவதைக் கேட்டு ஆனந்தமடைகின்றோம். பெற்றோர் பலர் வெற்றிமணி தங்கள் குழந்தைகளை நல் வழிப்படுத்துவதைப் பாராட்டி எழுதியுள்ளனர். சிறுவர்கள் பலர் தங்களை எழுத்துலகுக்குக் கொண்டு வந்தது வெற்றிமணியே என்று நன்றி கூறுகின்றனர். வெற்றிமணியில் வெளியிட சிறுவர்களுக்கேற்ற தரமான கதை கட்டுரை, கவிதை, விகடத் துணுக்குகள் ஆகியவற்றை அனுப்பி வைக்கும்படி அறிஞர்களை வேண்டுகிறோம். அத்துடன் வருடச் சந்தா நான்கு ரூபாவை அனுப்பி வெற்றிமணிவளர உதவி புரியும்படி பணிவன்புடன் வேண்டுகின்றோம்.

**வாசக நேயர்களுக்குப் புத்தாண்டு**

**நல்வாழ்த்துக்கள்!**

# வண்டே நீ என்ன கண்டாய்

இரசிகமணி கனக. செந்திநாதன்

''புதிய செந்தமிழ் மாலை புகழ் மாலை பாடிப், பொருவில் கந்தா சுகந்தா என்றுபாடிக் கதிரைமலை காணுத கண்ணென்ன கண்ணே! கர்ப்பூர ஒளிகாணுக் கண்ணென்ன கண்ணே!'' எனப் பாடியவாய் தேனூறும்படி பாடியுள்ளார் தங்கத்தாத்தா சோமசுந்தரப்புலவர் அவர்கள். அருணகிரிநாதர் முதல் சோமசுந்தரப்புலவர் வரை கதிர்காமக் கந்தனை மனமுருகப் பாடியவர் எண்ணிறந்தோர்' சோமசுந்தரப்புலவருக்குப் பின்னுள்ள ஈழத்துக் கவிஞர்களும் சமயம் வாய்க்கும் போதெல்லாம் பாடிக்கொண்டுதான் இருக்கிருர்கள். அவர்களுள் ஒருவர் புதுமையாகப் பாடுகிருர். வண்டைத் தூதுவிட்ட சங்கதிகள் எல்லாம் பழைய சங்கதிகள். இக் கவிஞர் கதிர்காமத் திருவிழா பார்த்துத் திரும்பி வந்த வண்டைப் பார்துக்கேட்கிருர். ஆம் கிராமத்திலிருந்து யாராவது கதிர்காமம் சென்று வந்தால் அதைக் கண்டாயா? இதைப் பார்த்தாயா? என்று கேட்போமே. அதைப் போலக் கவிஞர் கேட்கிருர்.

சூழத் தெரியும் பசிய மலைகள்
சுரும்பர்க் கென்ன சொல்லிற்ருே
ஆழத் தெரியும் காலிக் கடலின்
அலையின் நாதம் கேட்டாயா
நீளத் திகழும் கானற் சோலை
நிலவின் ஒளியிற் கண்டாயா
வாழப் பொருளைத் தேடுங் கவலை
வாலைத் தலையைக் காட்டிற்ரு.

சாதாரண மனிதருக்குள்ள ஆசாபாசம் - பொருள் சேர்க்கும் கவலை - கதிர்காமத்திற்கு 'அரோகரா'ச் சத்தத்திலும் பக்திப்பரவசத்திலும் இயற்கை அழகிலும் அமுங்கிப் போய்விடும். சில மனிதர்களுக்கு அங்கே போனுலும் இந்த நினைப்பு விடுவிதில்லை. ஆனபடியால் அதை வண்டினிடமும் கேட்கிருர் கவிஞர் ''வாழப்பொருளைத் தேடுங்கவலை வாலைத் தலையைக் காட்டிற்ரு?'' என்று. வாலைத் தலையைக் காட்டிற்ரு? என்பது நல்ல தொடர்.

அடுத்துக் கவிஞர், ''வானம் இருண்டு அழுது குளறி வாழ்த்தி வழங்க மகிழ்ந்தயா? ஆனை நடக்கும் ஞான நடையில் அருளின் பொருளைக் கண்டயா? என்றெல்லாம் வண்டினிடம் கேட்கிறார். அடுத்த பாடல்தான் உச்சமானது. தமிழ் அன்பு மயமானது. அழகான ஓசையுடையது. பக்தியைச் சொல்வதற்கு உகந்தது என்றெல்லாம் சொல்லிவிட்டுச் சிலர் சீனவெடி வெடிப்பது போல எடுத்தபொருளுக் கேற்ற சொற்களே இல்லாமல் அடா, புடா, டூம் என்றுபாடுகிறார்கள். இதோ கவிஞர் பாடுகிறார்.

''அலைமேல் அலையாய் மணிவாய் மிடறு
அகரம் உகரம் இசை போட
கலையே உருவாய் வருவார் திரளும்
கணநா யகனைக் கண்டாயா?
மலைமேல் ஒருமான் உடையான் மகனாய்
மயில்வா கனனாய் வருவானைத்
தலையே பணிய முருகா!! சரணம்!!
சரணஞ் சரணம்!! என்றாயா?

பாடலை வாசித்த உடனேயே மனதைக் கௌவிக்கொள்கிறது. திருமபத் திரும்பப் பாடவேண்டும் என்ற அவா பிறக்கிறது''. 'மிடறு அகரம் உகரம் இசை போட, கலையே உருவாய்வருவார்' 'மலைமேல் ஒருமான் உடையான் மகனாய் மயில் வாகனனாய் வருவான்' என்றதொடர்களுக்கு எவ்வளவோ சொல்லலாம். அப்படியே, கணநாயகன்' என்பதும் பொருளாழம் உள்ளது தான். ஆனாலும் ஆழம் பொருள் என்பனபற்றி அதிகம் அக்கறை இல்லாமல் கூட இந்தப் பாடலைக் காலமெல்லாம் பாடலாம். இதைப்பாடியவர் நயினைகவி. ஆ. இராமுப்பிள்ளை. இயற்கைப்புலமை உள்ளவர். ஆசுகவி பாடுவதில் நிகரற்றவர். நயினை நாகபூஷணி மீதும், நயினை கந்தவேள்மீதும் இரண்டு காவடி நூல்களை வெளி யிட்டுள்ளார்.

* *

*ஏழாந்தரப் புவியியல்*

# 8. ஐரோப்பா — அறிமுகம்

வீ. கந்தவனம். பீ. ஏ.

எங்கள் நாட்டை முன்பு போத்துக்கீசரும் இடச்சுக்காரரும் ஆண்டனர். இவர்களுக்குப் பின் ஆங்கிலேயர் இலங்கையை நெடுங்காலம் ஆட்சி செய்தனர். இவ்வினத்தவர்கள் ஐரோப்பியராவர். போத்துக்கீசரின் தாய்நாடாகிய போத்துக்கலும், இடச்சுக்காரரின் தாய்நாடாகிய ஒல்லாந்தும், ஆங்கிலேயரின் தாய் நாடாகிய இங்கிலாந்தும் ஐரோப்பாவிலுள்ளன.

ஐரோப்பா ஒரு சிறிய கண்டம். இது ஆசியாவின் மேற்குத் தொடர்ச்சியாக நீண்டுள்ளது. ஊறல் மலைத் தொடர், காக்கேசு மலைத்தொடர், கருங்கடல் என்பன ஐரோப்பாவை ஆசியாக் கண்டத்திலிருந்து பிரிக்கின்றன. ஐரோப்பாவுக்குத் தெற்கில் மத்தியதரைக் கடலுள்ளது. இது ஐரோப்பாவை ஆபிரிக்காவிலிருந்து பிரிக்கிறது. ஐரோப்பாவுக்கு மேற்கில் அத்திலாந்துச் சமுத்திரமும், வடக்கில் ஆட்டிக்குச் சமுத்திரமுமுள்ளன.

ஐரோப்பா கடகக் கோட்டுக்கு முற்றுக வெளியில் அமைந்துள்ள ஒரு கண்டமாகும். இது ஒரு சிறிய கண்டமாயினும் இதன் கடற்கரையோரச் சுற்றளவு நீளத்தில் கூடியது. கடற்கரையோரம் மிகவும் முறிவு பெற்று இருப்பதே இதற்குரிய காரணமாகும். இதனுல் ஐரோப்பாவிற் பல குடாநாடுகள் தோன்றியுள்ளன. குடாநாடு என்பது, ஒரு பகுதி பிரதான நிலத்தோடு இணைந்தும் ஏனைய திசைகளில் நீர் சூழ்ந்துமுள்ள ஒரு சிறிய நிலப்பரப்பாகும். அபிசீனியா, இத்தாலி, பேக்கன், யட்லாந்து, சிகண்டினேவியா என்பன ஐரோப்பாவின் பெருங்குடா நாடுகளாகும். இவற்றைத் தவிரப் பல சிறிய குடாநாடுகளும் இங்கு காணப்படுகின்றன. இதனுல் 'குடாநாடுகளைக் கொண்ட குடா நாடு' என்று ஐரோப்பா அழைக்கப்படுகின்றது. மற்றைய கண்டங்களைப் போன்று ஐரோப்பாவின் எல்லாத் திசைகளிலும் நீர்ப்பரப்புச் சூழ்ந்திருக்கவில்லை. அதன் கிழக்குப் பகுதி ஆசியாவுடன் இணைந்திருக்கின்றது. இதனுலேயே ஐரோப்பாவும் ஒரு பெருங் குடா நாடு என்று குறிக்கப்படுகின்றது.

ஐரோப்பாவும் ஆசியாவுஞ் சேர்ந்து ஐரோப்பாசியா (ஐரோ-ஆசியா) எனப்படும் பகுதியை உருவாக்குகின்றன. இப்பகுதி உலகிலுள்ள ஏனைய நிலப்பரப்புகளிலும் பார்க்க மிகப் பரந்த நிலப்பரப்பாகும்.

ஐரோப்பாவைச் சூழ்ந்து பல தீவுகள் காணப்படுகின்றன. மத்தியதரைக் கடலில் கிறீற்று, சிசிலி, கோசிக்கா, சாடினியா முதலிய தீவுகளுள்ளன. வட அத்திலாந்துச் சமுத்ரத்திற் பிரித்தானிய தீவுகள் அமைந்திருக்கின்றன. இவை மிக முக்கியமான தீவுகளாகும்.

ஐரோப்பா பின்வரும் நாடுகளை அடக்கியுள்ளது இவை உலகில் முன்னேற்றமடைந்துள்ள நாடுகளுட் சிலவாம்.

போத்துக்கல், இசுபானியா, பிரான்சு, ஐக்கியஇராச்சியங்கள், அயர்லாந்து, பெல்சியம், நெதலாந்து, இலக்சம்பேக்கு, யேமனி, போலாந்து, செக்கோசிலவாக்கியா, சுவிச்சலாந்து, இத்தாலி, அவுத்திரியா, யூகோசிலேவியா, அல்பேனியா, கிறீசு (கிரேக்கம்), பல்கேரியா, உரூமேனியா, கங்கேரி, சோவியத்துஇரசியா, பின்லாந்து, சுவீடன், நோர்வே.

இந்நாடுகளின் தலைப்பட்டணங்களைப் படத்திற் கண்டறிக.


## விற்பனையாளர்கள் தேவை!

வெற்றிமணி விற்பனை செய்ய

**முற்பணம் கட்டக்கூடிய விற்பனையாளர்கள் தேவை**

பிரதிக்கு 5 சதம் கமிஷன் கொடுக்கப்படும்.

**விளம்பரம் சேகரித்துக் கொடுப்பவர்களுக்கு**

20 சத வீதக் கமிஷன் கொடுக்கப்படும்.

ஆசிரியர்

## ○ திரை மலர் ○

தும்பி

### சரிகமபதநி

இப்படியொரு நகைச்சுவை நாடகம் சென்னை கைத்தறிப் பொருட் காட்சிக் கலையரங்கில் நடைபெற்று வருகிறது.

—o—

### அருணோதயம்

முத்தா பட நிலையத்தாரின் அருணோதயம் ஸ்ரீ வேங்கடேஸ்வரா சினிகோனில் படமாகிக் கொண்டிருக்கிறது. இப் படத்தில் இயற்கைக் காட்சிகளே மிகுதியாக இருக்குமாம்.

—o—

### 15 நாட்களில் திரைப்படம்

''நாட்டிய பாக்கியம்''என்ற கன்னடப் படத்தை 15 நாட்களில் உருவாக்கியிருக்கிறார்கள். ஆர். நாகேந்திரராவ் இயக்க நாராயணசித்திரா என்ற பட நிலையம் தயாரித்திருக்கிறது.

—o—

### சிவாஜியும் இத்தாலி நடிகையும்

ஓங்கூர் புரொடக்ஷன்சாரின் சிறந்த தயாரிப்பான இப் படத்திற்காக ஜெமினி பட நிலையத்தில் சமீபத்தில் பூசை போடப்பட்டது. மல்லியம் ராஜகோபால் கதை வசனம் எழுதும் இவ் வண்ணப் படத்தில் நடிகர் திலகம் சிவாஜியும் ஆங்கிலப் படங்களில் நடிக்கும் பிரபல இத்தாலி நடிகையும் இணையாக நடிப்பார்கள். இதில் நாகேசும் உள்ளார்.

## விந்தைச் செய்திகள்!

### அசுரத்தனமான பார்ட்டி!

பிராட்லி மார்ட்டின் என்ற அமெரிக்க இளைஞருக்குத் திருமணம்நடந்தது. அதற்குப் பார்ட்டிச் செலவு மட்டும் இருப்த்தேழு லட்ச ரூபாவாம். டாலரில் 3,69,000. உலகிலேயே இவ்வள்வு செலவு செய்து யாரும் திருமணவிருந்து வைத்ததில்லை. இது நடந்த வருடம் 1897.

### கட்டணமா? தண்டனையா?

ஜப்பானில் தற்போது எக்ஸ்போ 70 என்னும் உலக சந்தை மிகச் சிறப்பாக நடந்துகொண்டிருக்கிறது. இதில் கலந்துகொள்ளச் சீனாவை அழைக்கவில்லை யப்பான். இந்தச் சந்தைக்குள் நுழையக் கட்டணம் என்ன தெரியுமா? பெரியவர்களுக்கு 800 யென் (16 ரூபா 82 பைசா); இளைஞர்களுக்கு 600 யென் (12 ரூபா 82 பைசா). குழந்தைகளுக்கு 400 யென் (8 ரூபா 41 பைசா). இங்கு இருபது பைசா டிக்கெற்றுக்கே பெருமூச்சு விடும் நம்மவர்கள் ஜப்பான் உலகச் சந்தைக் கட்டணத்தைப் படித்து விட்டு மயக்கமடைந்து கிடக்கிறார்களாம்!

### பாம்பு பிடிக்கலாம்!

நிலவேம்பு இலை, வசம்பு இலை, வெள்ளைப்பூண்டு, கருடன்கிழங்கு இவைகளில் ஏதாவது ஒன்றை வாயில் மென்று உமிழ் நீரைத் துப்பியவாறே நாக பாம்பைப் பிடிக்கலாம். பாம்போ மயங்கிய நிலையிலிருக்கும்!

# கணக்கியலுக்கோர் அறிமுகம் (22)

—: வை. சி. சிவஞானம் :—

**கணக்கேடுகளில் பதியப்படாத நடவடிக்கைகளை முடிவுக் கணக்குகளில் சேர்த்தல்.**

கணக்கேடுகளில் பதிந்த விபரங்களைக் கொண்டு தயாரிக்கப்பட்ட முடிவுக் கணக்குகளைச் சென்ற பாடத்தில் பார்த்தோம். கணக்கேடுகளில் பதியப்படாத சில தகவல்களை முடிவுக் கணக்குகளைத் தயாரிக்கும்போது உரிமையாளர்கள் தரக்கூடும். அவ்வித நடவடிக்கைகளையும் கணக்கேடுகளிலும் முடிவுக்கணக்குகளிலும் சேர்ப்பது முடிவுக்கணக்குகளைத் தயாரிப்போரின் கடமையாகும், இவற்றைச் செம்மையாக்கல் என்றும் கூறுவர்.

1. கொடுக்க வேண்டிய செலவுகள்.

கொடுத்த செலவுகள் காசேட்டில் வரவு நிரலில் பதியப்பட்டிருப்பதால் அவற்றுக்கு பேரேட்டில் எதிர்ப் பதிவுக்கணக்குகள் இருக்கும். சில வியாபார நிலையங்கள் கொடுக்கவேண்டிய செலவுக்ளுக்கு முடிவுக்கணக்குகள் தயாரிக்கும்வரை கணக்குகளில் பதியப்படாமல் இருக்கலாம்.

உதாரணமாக: சம்பளம் செல்மதி 375 ரூபா

இவற்றைப் பின்வரும் இரு கணக்குகளில் பதிதல் வேண்டும்.

சம்பளக்கணக்கு பற்று 375 ரூபா.

சம்பளம் செல்மதிக்கணக்கு வரவு 375 ரூபா.

பேரேட்டில் இவ்விரு கணக்குகளிலும் பதிதல் வேண்டும்.

முடிவுக்கணக்குகளைத் தயாரிக்கும்போது இலாப நட்டக்கணக்கில் கொடுத்த சம்பளத் தொகையுடன் கொடுக்க வேண்டிய சம்பளத் தொகையையும் கூட்டி இலாப நட்டக்கணக்கில் பற்றுப் பாகத்திலும் ஐந்தொகையில் சம்பளம் செல்மதித் தொகையைக் கடன் பாகத்திலும் பதிதல் வேண்டும்.

2. பெறவேண்டிய வருமானங்கள்.

பெற்ற வருமானங்கள் காசேட்டின் பற்று நிரலில் பதியப்பட்டு உள்ளதால் அதற்குரிய எதிர்ப்பதிவுகள் பேரேட்டுக் கணக்குகளில் பதியப்பட்டிருக்கும். பெறவேண்டிய வருமானங்கள் பணம் வராதபடியால் முடிவுக்கணக்குகள் தயாரிக்கும் வரை கணக்கேடுகளில் பதியப்படாமல் இருக்கலாம்.

உ+ம்: பெறவேண்டிய தரகு 250 ரூபா.

இவற்றைப் பின்வரும் இரு கணக்குகளில் பதிதல் வேண்டும்.

தரகு வருமதிக்கணக்கு பற்று 250 ரூபா.

தரகுக்கணக்கு வரவு 250 ரூபா.

பேரேட்டில் இவ்விரு கணக்குகளிலும் பதிதல் வேண்டும். முடிவுக்கணக்குகளைத் தயாரிக்கும் போது பெற்ற தரகுடன் பெற வேண்டிய தரகுத் தொகையையும் கூட்டி மொத்தத் தொகையை இலாப நட்டக்கணக்கில் வரவுப் பாகத்தில் பதிதல் வேண்டும். ஐந்தொகையில் வருமதித் தரகுத்தொகையைச் சொத்துக்கள் பாகத்தில் பதிதல் வேண்டும்.

3. முற்பணமாகக் கொடுத்த செலவினங்கள்.

நிரந்தரச் செலவினங்கள் சிலவற்றுக்கு ஒரு குறிப்பிட்ட தொகையை முற்பணமாகவே கொடுக்க வேண்டிவரும். முடிவுக்கணக்குகள் தயாரிக்கும் திகதிக்குப் பின்னுள்ள காலத்துக்குரிய செலவினங்களை முன்கூட்டியே கொடுத்திருந்தால் காசேட்டின் பதிவு நிரலிலும், பேரேட்டில் அச்செலவு கணக்கின் பற்று நிரலிலும் பதியப்பட்டிருக்கும். முடிவுக்கணக்குகளைத் தயாரிக்கும்போது அத் தேதி வரைக்குமுரிய செலவுகளைக் கணக்கிட்டு அத் தொகையை இலாப நட்டக்கணக்கில் பற்றிலும் மீதித்தொகையை ஐத்தொகையில் சொத்துக்கள் பக்கத்திலும் பதிதல் வேண்டும்.

உ+ம்: இரண்டு வருட விளம்பரம் கொடுத்தது 1200 ரூபா.

இது விளம்பரக் கண்க்கில் பற்றிலும் காசுக்கணக்கில் வரவுப் பக்கத்திலும் பதியப்பட்டிருக்கும். பேரேட்டிலேயே இதற்குக் கணக்குகள் ஆரம்பிப்பதாயின் ஒரு வருட விளம்பரமாகிய 600 ரூபாவை

விளம்பர முற்பணக் கணக்கு பற்று 600 ரூபா.
விளம்பரக் கணக்கு வரவு 600 ரூபா.

எனப் பதிதல் வேண்டும். முடிவுக் கணக்குகளைத் தயாரிக்கும்போது விளம்பரக்கணக்கில் 600 ரூபாவை முற்பணம் எனக்கழித்து மீதித் தொகையை இலாப நட்டக்கணக்கின் பற்றுப் பாகத்திலும் முற்பணத் தொகையை ஐந்தொகையின் சொத்துப் பாகத்திலும் பதிதல் வேண்டும். இதை முடிபுச் செலவுகள் என்றும் கூறுவர்.

4. முற் பணமாகப் பெற்ற வருமானங்கள்.

நிரந்தர வருமானங்கள் சிலவற்றை முற் பணமாகப் பெறக் கூடிய சந்தர்ப்பங்கள் ஏற்படும். முடிவுக் கணக்குகள் தயாரிக்கும் திகதிக்குப் பின்னுள்ள காலத்துக்குரிய வருமானங்களை முன் கூட்டியே பெற்றிருந்தாலும் காசேட்டின் பற்றுப் பாகத்திலும், பேரேட்டில் அக் கணக்கின் வரவுப்பாகத்திலும் பதியப்பட்டிருக்கும்.

உதாரணமாக: இரு வருட வாடகையாகப் பெற்ற பணம் 2400 ரூபா.

காசுக் கணக்குப் பற்று 2400 ரூபா.
பெற்ற வாடகைக் கணக்கு வரவு 2400 ரூபா.

எனப் பதியப்பட்டிருக்கும். முடிவுக் கணக்குகள் தயாரிக்கும்போது பேரேட்டில் பின்வரும் மாற்றங்களைச் செய்தல் வேண்டும்.

பெற்ற வாடகைக் கணக்குப் பற்று 1200 ரூபா.
வாடகை முற்பணக் கணக்கு வரவு 1200 ரூபா.

எனப் பதிதல் வேண்டும். முடிவுக் கணக்குகளைச் செம்மையாக்க வேண்டுமாயின் பெற்ற வாடகையில் 1200 ரூபாவை முற்பணம் எனக் கழித்து மீதித் தொகையையே இலாப நட்டக்கணக்கில் வரவில் பதிதல் வேண்டும். முற் பணத் தொகையை ஐந்தொகையில் கடன் பக்கத்தில் பதிதல் வேண்டும்.

நீண்ட காலத்துக்கு கொடுக்கப்பட்ட செலவினங்கள், நீண்ட காலத்துக்குப் பயன்படும் செலவினங்கள் ஆகியவற்றை ஒரே வருடத்தில் இலாப நட்டக்கணக்குக்குக் கொண்டு செல்லாது ஒரு குறிப்பிட்ட சில வருடங்களுக்குப் பகுதி பகுதியாகக் கொண்டுசெல்வது வழக்கம். இலாப நட்டக் கணக்குக்குக் கொண்டுசென்றதுபோக மீதித் தொகையை ஐந்தொகையில் சொத்துக்கள் பக்கத்தில் பதிதல் வேண்டும்.

உ+ம் குத்தகைக்கு கொடுத்தது 10,000 ரூபா.

(5 வருடங்களுக்குக் காணி குத்தகைக்கு எடுக்கப்பட்டது)

குத்தகைக் கணக்கு பற்று 10,000 ரூபா.
காசுக் கணக்கு வரவு 10,000 ரூபா.

முதல் வருடத்தில் முடிவுக் கணக்குகள் தயாரிக்கும் போது குத்தகைக் கணக்கிலிருந்து 2000ரூபாவை மட்டும் அவ்வருட இலாப நட்டக்கணக்கில் பற்றுப்பாகத்தில் பதிதல் வேண்டும். மீதித்தொகையை ஐந்தொகையில் சொத்துப் பாகத்தில் பதிதல் வேண்டும்.

இதேபோன்று நீண்ட காலத்துக்காகப் பெற்ற வருமானங்கள், நீண்ட காலப்பகுதிக்குரிய வருமானங்கள் ஆகியவற்றை ஒரே வருடத்துக்கு இலாப நட்டக்கணக்குக்குக் கொண்டு செல்லாது ஒரு குறிப்பிட்ட சில வருடங்களுக்குப் பகுதி பகுதியாகக் கொண்டு செல்வது வழக்கம், இலாப நட்டக் கணக்குக்குக் கொண்டு சென்றது போக மீதித் தொகையை ஐந்தொகையில் கடன்கள் பக்கத்தில் பதிதல் வேண்டும்.

உ+ம் : தொழில் பயில்வோன் கட்டணமாகப் பெற்றது 4000 ரூபா

காசுக் கணக்கு பற்று 4000
தொழில் பயில்வோன் கட்டணக் கணக்கு வரவு 4000

(தொழில் பயில்வோர் 4 வருடங்கள் தொழில் பயிலச் சேர்ந்துள்ளனர்) எனவே முதல் வருடத்தில் முடிவுக் கணக்குகள் தயாரிக்கும்போது தொழில் பயில்வோர் கணக்கிலிருந்து 1000 ரூபாவை மட்டும் இலாப நட்டக் கணக்கில் வரவு வைக்கவேண்டும். மீதித் தொகையை ஐந்தொகையில் கடன்கள் பக்கத்திற் பதிதல் வேண்டும். இவ்வாறு 4 வருடங்கள் முடியும்வரை செய்தல்வேண்டும்.

5. மூலதன வட்டியும் - பற்று வட்டியும்

மூலதன வட்டி கணக்குகள் முடிக்கப்பட முன்னரே கணக்கிடப்பட்டுக் கணக்குகளில் பதியப்பட்டால் வட்டிக் கணக்கில் பற்றிலும்

மூலதனக் கணக்கில் வரவிலும் பதியப்பட்டிருக்கும். முடிவுக் கணக்குகள் தயாரிக்கும்வரை கணக்குகள் பதியப்பட்டிராதுவிடின் மூலதன வட்டியை இலாப நட்டக் கணக்கிற் பற்றிலும் அல்லது கொடுத்த வட்டியுடன் கூட்டுதல் வேண்டும். ஐந்தொகையில் மூலதனத்துடன் கூட்டுதல் வேண்டும்.

பற்று வட்டி என்பது முதலாளி சொந்தத் தேவைக்காக எடுத்த பணத்துக்குக் கொடுக்கும் வட்டியாகும். இதற்குரிய பதிவுகள்

பற்றுக் கணக்கு பற்று
வட்டிக் ,, வரவு ஆகும்.

முடிவுக் கணக்குகள் தயாரிக்கும்வரை பற்று வட்டிக் கணக்குகளில் சேர்க்கப்படாதிருந்தால் வட்டித் தொகையைப் பற்றுத் தொகையுடன் கூட்டி அத் தொகையை ஐந்தொகையில் மூலதனத்திலிருந்து கழித்தல் வேண்டும். வட்டித் தொகையை இலாப நட்டக் கணக்கு வரவில் பதிதல்வேண்டும்.

6. பதியப்படாத நடவடிக்கைகள்:-

பதியப்படாத நடவடிக்கைகள் ஒவ்வொன்றும் பெரும்பாலும் இரு கணக்குகளில் பதியப்படவேண்டியவையாகும். அவ்விரு கணக்குகளும் முடிவுக் கணக்குகளில் எக் கணக்குகளிற் பதியப்படவேண்டுமோ அக் கணக்குகளிற் பதியப்படவேண்டும்.

உ+ம் : முதலாளி எடுத்த சரக்கு 350
சொந்தச் செலவுக் கணக்கு பற்று 375 ரூபா

கொள்முதற் கணக்கு வரவு 375 எனப் பதியப்படல் வேண்டும். முடிவுக் கணக்குகள் தயாரிக்கப்படும்வரை கணக்குகளிற் பதியப்படாதுவிடின் வியாபாரக் கணக்கில் கொள்முதல் கழித்துக் காட்டப்படுதல் வேண்டும். ஐந்தொகையில் மூலதனத்திலிருந்து கழித்துக் காட்டப்படுதல் வேண்டும்.

— தொடரும்


## நீல மலர்

**கா. தமிழ்த்தம்பி எழுதும் தொடர் நவீனம்.**

★ ஓவியப் பூங்கா! ★ காவியத் தேனூறு!

★ நெஞ்சிருக்கும்வரை நினைவிருக்கும் நிகழ்ச்சிகள்!

★ எழில்ராணி இலங்கை! ★ ஏற்றமிகு தமிழகம்!

இவற்றின் இணையற்ற படப்பிடிப்பு.

**'வெற்றிமணி'** அடுத்த இதழில் தொடங்குகிறது.

— ஆசிரியர்

# ஈழகேசரி பொன்னையா ஞாபகார்த்தப் பேச்சுப் போட்டி 1970

குரும்பசிட்டி சன்மார்க்க சபையினரால் வருடந் தோறும் அகில இலங்கை ரீதியில் நடத்தப்படும் ஈழகேசரி பொன்னையா ஞாபகார்த்தப் பேச்சுப்போட்டி 12-4-70இல் இரசிகமணி கனக. செந்திநாதன் தலைமையிற் சிறப்பாக நடைபெற்றது.

முதலியார் சி. முத்துத்தம்பி அவர்கள் பரிசு பெற்றவர்களுக்குப் பரிசில்களை வழங்கினர்.

<u>பரிசு பெற்றவர்கள் விபரம்:</u>

மேற்பிரிவு

1. அ. புராந்தகன் — தங்கப் பதக்கம்
   சிவநீர்க் கலைமன்றம், அளவெட்டி.
2. கி. சிவபாலன் — வெள்ளிப் பதக்கம்
   இந்துக் கல்லூரி, யாழ்ப்பாணம்
3. அ. ஜெயதேஸ்வரி — புத்தகப் பரிசு
   வசாவிளான் மகாவித்தியாலயம்.

கீழ்ப்பிரிவு

1. வே. கல்யாணி — தங்கப் பதக்கம்
   சிவநீர்க் கலைமன்றம், அளவெட்டி.
2. க. ஜெயராணி — வெள்ளிப் பதக்கம்
   பொன். பரமானந்தர் வித்தியாலயம், குரும்பசிட்டி.
3. சு. குமுதினி — புத்தகப் பரிசு
   யார்க்கரு விநாயகர் வித்தியாசாலை, கரவெட்டி.

---


## வெற்றிமணி விற்பனையாளர்கள்

**எம். எல். ஜலால்தீன்**
''அருளகம்''
பொத்துவில்.

**ச. அருளானந்தன்**
சேனையூர் மகாவித்தியாலயம்
மூதூர்.

Meenambikai News Agency
*235, Lower street,*
BADULLA.


---

## பெயர் மாற்றம்

குரும்பசிட்டி தமிழ்க் கலவன் பாடசாலை 25-3-70 தொடக்கம் யா/குரும்பசிட்டி பொன். பரமானந்தர் வித்தியாலயம் என மாற்றப்பட்டுள்ளதாக வித்தியாதிபதி அவர்கள் அறிவித்துள்ளார்கள்.

15-4-70.

மு. க. சுப்பிரமணியம்
தலைமையாசிரியர்

# பேனா நண்பர் சங்கம்

27. அ. அரசரெத்தினம் — வட்டம் இல. 6
வயது 24 — சேனையூர்,
மூதூர்.

க. பொ. த. சாதாரண பரீட்சையிற் சித்தியடைந்தவர். விவசாயப் பாடசாலையிலும் பயிற்சி பெற்றவர். கவிதை எழுதுதல், கதை, கட்டுரை வாசித்தல், கரபந்து விளையாடுதல் ஆகியன இவரின் பொழுதுபோக்குகளாகும். இருபாலாரும் தொடர்பு கொள்ளலாம்.

# நேயர் குரல்

சேனையூர் - 6
மூதூர்.

ஐயா,

சிறுவர் (மாத) இதழான 'வெற்றிமணி' ஏடு வளர்ந்தோர், வயோதிபர்களும் வாசித்து வளம் பெறும்வண்ணம் மலர்ந்து வருவது கண்டு நன்றி கூறுகின்றேன். கவிதை அரங்கம் ஒரு சிறந்த அம்சமாகும். வெற்றிமணி ஏட்டைத் தொடர்ந்து எடுக்கும்படி என்னைத் தூண்டியதற்குக் காரணமே கவிதை அரங்கம்தான்.

அ. அரசரத்தினம்

## ஆசிரியர் சம்பள மாற்றம்

1-10-69 தொடக்கம் மாற்றப்பட்ட ஆசிரியர்களின் சம்பள விகிதம் 15-5-70 வெற்றிமணியில் வெளியிடப்படும்.

— ஆசிரியர்


# தமிழக நேயர்களுக்கு

இந்தியாவிலுள்ளவர்கள்

**வெற்றிமணிக்குரிய சந்தா, பேனா நண்பர் சங்கம்**

**மாணவர் மன்றம்**

இவற்றிற் சேர்வதற்குரிய தொகை யாவற்றையும்

இவருக்கு அனுப்புக

**கா. தமிழ்த்தம்பி**

காரியம்பட்டி (P. O.)

(வழி) கள்ளிமந்தயம்

பழனிவட்டம்

## - சந்தா -

1968 தை மாதம் தொடக்கமாகப் பல நேயர்களுக்கு வெற்றி மணி தொடர்ந்து அனுப்பி வருகின்றோம். இவர்களிற் பலர் 1968, 1969 ஆகிய இரு வருடங்களுக்கும் உரிய சந்தாவைச் செலுத்திவிட்டனர். சிலர் இன்னும் சந்தா அனுப்பவில்லை. வெற்றிமணி பெறும் அன்பர்கள் சந்தா இன்னும் அனுப்பாதிருந்தால் தயவுசெய்து சந்தாவை அனுப்பி ஆதரிக்கவும். சந்தா அனுப்பாதவர்கள் வெற்றி மணியைத் தொடர்ந்து பெற விரும்பாவிடில் இதுவரை பெற்ற பிரதிகளுக்குரிய பணத்தை அனுப்பிவைப்பதுடன் தொடர்ந்து வெற்றி மணியை அனுப்பவேண்டாம் என் எமக்கு அறிவிக்கவும்.

விலாச மாற்றம் பற்றியும் உடனுக்குடன் அறிவிக்க வேண்டும். இலங்கையிலிருந்து வெளிவரும் ஒரேயொரு சிறுவர் பத்திரிகை 'வெற்றிமணி'. எனவே வருடம் 4 ரூபா சந்தாவைக் கொடுத்து ஆதரிக்கவேண்டுமென அன்புடன் வேண்டுகிறோம்.

ஆசிரியர் – ''வெற்றிமணி''
253 1/1 ஸ்ரான்லி வீதி — யாழ்ப்பாணம்.

★ ★

கிடைக்கப் பெற்றோம்

## கூட்டு வழிபாட்டுப் பாடல்கள்

வெளியீடு; சைவசமய அபிவிருத்தி மன்றம்
பிளக்பூல் – நுவரெலியா.

நுவரெலியாவைச் சார்ந்த பிளக்பூலிலுள்ள சைவ சமய அபிவிருத்தி மன்றம் பயனுள்ள ஒரு கூட்டு வழிபாட்டுப் பாடல் நூலை வெளியிட்டிருக்கின்றது. ஆத்மஜோதி ஆசிரியர் திரு. நா. முத்தையா யாழ்ப்பாணம் உதவி அரசாங்க அதிபர் திரு. தி. முருகேசம்பிள்ளை ஆகியோர் உட்படப் பல பெரியார்களின் ஆசியுரைகளைத் தாங்கி தவத்திரு பித்துக்குளி முருகதாஸ் அவர்களுடைய 'முருகனும் பிரார்த்தனையும்' என்ற அரிய படைப்பையுங் கொண்டு, பல கூட்டுப் பாடல்களுடனும் தேவாரங்களுடனும் வெளிவந்திருக்கும் இந் நூல் ஒவ்வொரு சைவப்பிள்ளையின் கையிலும் இருக்க வேண்டிய வோர் நல்ல படைப்பு. மன்றத் தலைவர் திரு. மு. கா. கணபதிப்பிள்ளை செயலாளர் திரு. அ. சின்னையா ஆகியோரின் முயற்சி பராட்டப்பட வேண்டிய தொன்று.

குறிப்பு : சைவ சமயத்தை வளர்க்கும் மன்றங்களின் செயலாளர் அல்லது தலைவர் எழுதினால் இந்நூல் இலவசமாக அனுப்பி வைக்கப்படும்.

# ஆசிரியர் பதில்!

15-4-70 தொடக்கம் வெற்றிமணியில் ஆசிரியர் பதில் என்று ஒரு பகுதி வெளியிடப்படும். வெற்றிமணியில் வெளியிடுவதற்கென அனுப்பப்படும் விஷயங்கள்பற்றி அடிக்கடி ஆசிரியருக்கு எழுதுகின்றவர்களுக்குத் தனித்தனி பதில் எழுத முடியாமைக்கு வருந்துகின்றோம். தகுதியான கதை, கட்டுரை, கவிதை முதலியன பிரசுரிப்பதற்கு ஏற்றுக் கொள்ளப்படின் இப்பகுதியில் அவைபற்றி அறிவிக்கப் படும். மற்றவை தகுதியற்றவை என்பதே கருத்தாகும். அவற்றைத் திரும்பப் பெறவிரும்பின் உரிய முத்திரையை அனுப்பவேண்டும். தகுதியான விஷயங்கள் இட வசதிக் கேற்ப அவ்வப்போது வெளியிடப்படும். நேயர்கள் எழுதும் கடிதங்களுக்கு இப் பகுதியிற் பதில் கொடுக்கப்படும். எனவே ஒவ்வொரு மாத இதழிலும் இப்பகுதியை வாசிக்கத் தவறாதீர்கள்.

நோ. இராசம்மா - கல்முனை.
'சாகவில்லை' கவிதை ஏற்றதல்ல. வேறு அனுப்பவும். 'மரண ஓலம் - மரண ஓலம்' திருத்தத்துடன் வெளியிடப்படும்.

ஏ. எஸ். இப்ராகிம் - கலைமேகம், மூதூர்.
'வென்று நிற்பேன்' 'அறிவுச் சுடர்' கவிதைகள் ஏற்றவை யல்ல. 'வெற்றி காணடா' வெளியிடப்படும்.

ஏ. எச். ஏ. இமாதுதீன் - திக்குவல்லை.
'மலரட்டும் மண்ணகம்' கவிதை தகுதியற்றது. வேறு முயற்சிக் கவும்.

சௌமினி பஞ்சாட்சரசர்மா - கோப்பாய்.
'மனதின் நிறைவு கொஞ்சமா?' கவிதை ஏற்றது. வெளியிடப் படும்.

ஹெனமுல்லையூர் அஸ்வர் - பாணந்துறை.
'வேதனை தீர்ந்தது' கவிதை வெளியிடப்படும்.

எம். ஐ. எஸ். தாவூத் - மட்டக்களப்பு.
'கடமையின் சின்னமே' கவிதை வெளியிடப்படும்.

அ. அரசரெத்தினம் - சேனையூர்.
'இளம்பிறையே இயம்பிடுவாய்' 'நல்ல பிள்ளையாக வாழலாம்' இரண்டும் ஏற்றவை.

அன்னலட்சுமி - சேனையூர்.
'நன்று வாழு' கவிதை ஏற்றது.

ப. சிவம் - கோப்பாய்.
'மறுப்பதேனோ' திருத்தத்துடன் வெளியிடப்படும்.

பறிச்சான் கனகசிங்கம்
'உழைக்கவேண்டும்' கவிதை திருத்தத்துடன் வெளியிடப்படும்.

காரை. செ. சுந்தரம்பிள்ளை
'சின்னஞ் சிறு குழந்தை' கவிதை ஏற்றது வெளியிடப்படும்.

அ. திவ்யபூரணம்
'தமிழர் ஏனோ தூங்குகிறார்' கவிதை ஏற்றது.

— ஆசிரியர்




## கீதம்

''கலைமேகம்'' இப்ருஹிம், மூதூர்-6.

குயிலே குயிலே பாடு — நீ
கூவிக் கூவிப் பாடு!

வளரும் நல்ல சமுகம்
வளம் பெற்றோங்கப் பாடு
துளிரும் நாட்டுப் பற்று
தூணாய் உயரப் பாடு!

குயிலே குயிலே பாடு — நீ
கூவிக் கூவிப் பாடு!

பாட்டாளி உயர்வின் பேற்றை
பரப்பும் அரசின் கூற்றை
பழகும் பயிலும் சேய்க்கும்
பாடம் சொல்லிப் பாடு!

குயீலே குயிலே பர்டு — நீ
கூவிக் கூவிப் பாடு!

உலகை வருத்தும் பசியை
ஒழிந்து அழியச் செய்யும்
சோம்பல் போக்கும் துயரம்
சோர்ந்து போகப் பாடு!

★★
✶

# எங்கள் தாயகத்திருள்

— புதுவை இரத்தினதுரை —

சூழநின்று மோதி, முத்துச்
  சிப்பி பாடும் ஆழியில்
ஈழநாடு என்று சொல்லும்
  எங்கள் தாய கத்திருள்
நீளமான ஆறும், உச்சி
  நீல வானை முட்டிடும்
கோலமான வெற்பும் கொண்டு
  குமரி யாகத் திகழ்கிருள்.

தாவிஓடும் ஆறும், மெல்லத்
  தவழ்ந்து செல்லும் அருவியும்
பூவிரிந்து காட்சி தந்து
  புன்ன கைக்கும் சோலையும்
நாவிரிந்து பாட்டு திர்க்குப்
  நல்ல பாவ லர்களும்
மாவிருந்து போல எம்மை
  மகிழ வைக்கும் நாடிது.

கோண்வெற்பில் நின்று கீதக்
  குயில்கள் பாடும் வேளையில்
ஆனமட்டும் அழகு மஞ்ஞை
  அங்கு செய்யும் நடமதைக்
காணநூறு வேண்டும், நல்ல
  கண்கள் என்று சொல்லியே
பாண ரென்னும் பழையசாதி
  பாடும் எங்கள் ஈழமே.

உச்சி வெய்யில் வேளைகூட
  ஒய்ந்து கொள்ளா மானுடர்
பச்சை எங்கும் என்றுமாகப்
  பாடு பட்டுச் செய்குவார்
மிச்சம் நாளை செய்வமென்று
  மீதி வைக்கும் மாந்தரைத்
துச்சமாகத் தூக்கி யப்பால்
  தூர வீசும் ஈழமே

# நெருப்பு

— வே. குமாரசாமி —

1. உணவை ஆக்கவும்
ஒளியை ஏற்றவும்
அணியும் பொன்னதை
அழகு செய்யவும்

2. குப்பை கஞ்சலைக்
கொழுத்தி நீக்கவும்
வெப்பம் ஏற்றியே
வென்னீர் காய்ச்சவும்

3. உதவும் நெருப்பினுல்
ஊரை அழிக்கலாம்
நிதமும் கவனமாய்
ஒளியும் ஏற்றலாம்

4. தீயைப் போலவே
தேர்ந்த அறிவினுல்
மாயம் செய்யலாம்
மாண்பும் செய்யலாம்

★★

# எந்த ஏடோ?

செல்வி ரமணி பொன்னுத்துரை

முத்தான செந்தமிழால் முறையாகச் செய்திதந்து
பக்குவமாய்ப் பணிபுரியும் பயன்மிக்க ஏடெதுவாம்?
தேன்போன்ற கட்டுரையும் சுவைமிக்க காவியமும்
வானேங்கு நற்றமிழால் வரைந்தளித்த ஏடெதுவாம்?
ஈழவள நாட்டினிலே ஓங்குயாழ்ப்பாணப் பதியினிலே
வாழுகின்ற அதிசயத்தை வரைந்தளித்த ஏடெதுவாம்?
திங்களிலே ஓர்முறைக்குத் திக்கெட்டப் பவனிவரும்
சீரான சிறுவர் இதழ் வெற்றிமணியவ்வேடாம்.

✱✱

# சுண்டெலி

— அழகனுர் —

வீட்டுக் கூரை தன்னிலே
வேக மாகப் பாய்ந்திடும்
ஓட்டை போட்டுச் சுவரிலே
ஓடி ஓடித் திரிந்திடும்.

தின்னு கின்ற தானியம்
தேடித் தேடித் தீர்த்திடும்
மென்று மென்று தூளிகளை
மோசம் செய்து போய்விடும்

ஆசை யோடு அடிக்கடி
அங்கும் இங்கும் நடந்திடும்
மீசைப் பூனை கண்ணிலே
வீழ்ந்தால் மீள்தல் அதிசயம்!

# தெரியுமா?

1. *மறைமலை அடிகளாரின் இயற்பெயர் என்ன?*
வேதாசலம்.

2. *கண்ணகியின் காற்சிலம்பு ஒன்றின் எடை என்ன?*
ஐம்பதினாயிரம் கழஞ்சு பொன்.

3. *அஷ்டோத்திர நீதி நூல் எது?*
108 சூத்திரங்களைக் கொண்டிருப்பதால் ஒளவையாரின் ''ஆத்தி சூடி''க்குத்தான் அப்பெயரை வைத்துள்ளனர் வேதாந்திகள்.

4. *விபூதி என்றால் என்ன பொருள்?*
வி = சிவன், பூ = பாவனை, தி = அடைதல், வி = ஒப்பற்ற, பூதி = செல்வம் இப்படிப் பொருள் கொள்ளலாம்.

5. *''சூப்பர் மார்க்கெட்'' என்கிறார்களே இதைத் தமிழ்ப்படுத்தலாகாதா?*
செய்யலாமே! பேரங்காடி என்று பெருமையோடு அழைக்கலாம்.

6. *புத்தர் ஜாதகக் கதைகள் எந்த மொழியில் எழுதப்பட்டது?*
பாலீ மொழியில்.

7. *வரியே இல்லாத நாடு எது?*
குவைட் நாட்டில் தான். வரி என்றால் என்னவென்றே தெரியாது. ஒவ்வொரு வீட்டிலும் டெலிவிஷனும் ரேடியோவும் உள்ளன. ஆனால் லைசென்ஸ் வாங்க வேண்டியதில்லை.

8. *மனித மாமிசம் சாப்பிடுகிறவர்கள் இருக்கிறார்களாமே?*
ஆமாம். சைனாவின் அருகில் சில தீவுகள் இருக்கின்றன. இங்குள்ள பழங்குடிகள் அந்நியரைக் கண்டால் அடித்துக் கொன்று சாப்பிட்டு விடுகிறார்கள்.

9. *பிரான்சின் தலை நகரம் எது?*
அழகு நடமாடும் பாரிஸ்தான். இந்நகரில் 5,300 தெருக்கள் உள்ளனவாம். இடமின்றி பூமிக்குள் பல அறைகளையும் சாலைகளையும் கட்டிக் கொண்டிருக்கிறார்கள்.

10. *சித்த மருத்துவத்தின் தந்தை யார்?*
அகத்தியரல்லர் திருமூலர் தான். இவர் எழுதிய ''தமிழ் மூவாயிரம்'' ''எண்ணாயிரம்'' இவ்விரு நூல்களும் காமதேனு கற்பக விருட்சத்திற்கு சமமானவை. அண்டங்களுக்குப் பறந்து செல்ல — அரூபமாய் உலவ இப்படியெல்லாம் வழி சொல்கின்றன.




# டிக்சனின் கொள்கை

— எம். ஐ. எஸ் தாவூத், மட்டக்களப்பு. —

வேர் அமுக்கம் கீழிருந்து செயற்படுவதிலும் பார்க்க ஆவியுயிர்ப்புக் காரணமாகக் காழ்க் கலன்களில் மேல் நோக்கி இழுக்கும் சக்தி அதி முக்கியத்துவம் வாய்ந்த தாகும். ஒரு தாவரத்தின் இலையிலுள்ள கல இடைவெளி களிலிருந்து நீர் ஆவியாகச் செல்வதைக் காண்கின்றோம். இலை வாயில்களினூடாக நீராவி செல்லும்போது இலை நடு இழையத்தின் செறிவு கூடிய சுவரிலிருந்து அதிக நீர் ஆவி யாகச் செல்கின்றது. பின் கலங்களிலுள்ள சிறு வெற்றிடங் களிலிருந்து மீண்டும் இச் சுவர் நீரைப் பெறுகின்றது. ஆகை யால் இக் கலன்களில் பிரசாரண அமுக்கம் அதிகரித்தும், வீக்க அமுக்கம் குறைந்தும், உறிஞ்சலமுக்கம் அதிகரித்தும் விடுகின்றது. ஆகையால் அவை மீண்டும் ஆழ்ந்து தொடர் பாக இருக்கும் இலை நடு இழையக் கலன்களிலுள்ள நீரைப் பெறுகின்றன. மீண்டும் இவற்றின் உறிஞ்சலமுக் கம் அதிகரிக்கின்றது. இப்படியே உட்புறக் கல இழையங் களை அடையும்வரை உறிஞ்சலமுக்கம் அதிகரித்துக் கொண்டே இருக்கும். இக் கலன்கள் காழ்க் கலன்களிட மிருந்து நீரைப்பெறுகின்றன.

ஆவியுயிர்ப்பு மூலம் நீர் எவ்வளவு இழக்கப்படுகிறதோ அவ்வளவு அதிகமான விசையின் பருமனுடன் காழ்க்கலன் களிலிருந்து நீர் பெறப்படும். இலைகளில் இவ்விசையின் பரு மன் சாதாரணமாக 10-15 வரை வளியமுக்கமாகும். திருக் கொண்டை மரத்தில் ஆவியுயிர்ப்பு நடத்தும் கிளைகளிலுள்ள பிரசாரண அமுக்கம் 6-8 வளியமுக்கம் என ''டிக்சன்'' என் னும் தாவர நிபுணர் கண்டறிந்தார். இவ்விசை 200 அடிக்கு நீரை உயரச் செய்ய முடிந்ததாகும். உஷ்ணம் மிகுந்த மாதங்

களில் ஆவியுயிர்ப்பு அதிகரிக்க அதிகரிக்க நீர் மேல்நோக்கிச் செலுத்தப்படுகின்றது. இவ் வேளையில் அடிமரத்தில் ஒரு தொளை ஏற்படுத்தி அதை வளைந்த குழாயுடன் காற்றுப் புகாவண்ணம் பொருத்திக் குழாயின் மறு நுனியை நீருள்ள ஒரு பாத்திரத்தில் விடவேண்டும். குழாயிலுள்ள நீர் மரத் தெம்பினல் இழுக்கப்படுமேயன்றி குழாய்க்குள் செலுத்தப் படமாட்டாது.

கலச்சாறு உயருவதற்கு மயிர்த் தொளைத் தாக்கத்தி லும் பார்க்கக் காழ்க் குழாய்களில் உட்கொள்ளும் தண்மை கூடிய உதவி புரிகின்றது. இவ் விரண்டு விசைகளைத் தவிர ஒரே இனத்தைச் சேர்ந்த மூலக் கூறுகளின் கவர்ச்சி காழ்க் குழாய்களுள் சாறு உயர்வதற்கு அதிக உதவிபுரிகின்றது.

ஒரு உயிரினம் தொடர்ந்து உயிர்வாழ்வதற்கு அது தோன்றிய நாள் முதல் அது இறக்கும்வரை நீர் தொடர்ச்சி யாகக் கிடைக்க வேண்டும். தாவரம் வளர்ந்துகொண்டு செல்லும்போது அதன் கடத்தும் இழையங்களிலுள்ள நீர் நிரல் எப்போதும் அறுபடாமல் இருக்கின்றது. நீர் குறை வாக இருந்தால் காழ்க் குழாயிலுள்ள நீர் ஒரு விகார நிலையை அடைகின்றது. அதிக நீர் கிடைக்குமாயின் மிகுதி நீர் இழையங்களுட் சென்று கல இடைவெளிகளை நிரப்பு கின்றது. இதற்குமேல் அதிகமாகவுள்ள நீர் இலைவாயில்கள் மூலம் நீராவியாக மாறி வாயுமண்டலத்தை அடைகிறது. டிக்சனின் கொள்கை தாவர உடற்றெழில் இயல் வல்லு னர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டதாகும். இக் கொள்கை மூன்று காரணிகளை விளக்குவதாயுள்ளது.

ஆரம்ப காரணி:- ஆவியுயிர்ப்பு

2 ஆவது காரணி:- ஆவியுயிர்ப்பு மூலம் இழக்கப்பட்ட நீரைச் சமப்படுத்துவதற்கு காழ்க் குழாயிலிருந்து இலை நடு இழையக் கலன்களுக்கு நீர் செல்லுதல். இதனல் காழ்க் குழாயில் இழுக்கும் சக்தி ஏற்படுத்தப்படுகின்றது.

3 ஆவது காரணி:- காழ்க் குழாயிலுள்ள நீர் நிரலின் விளைவினல் இலைநடு இழையக் கலன்களில் இருந்து உண் டாகும் இழுக்கும் சக்தி வேர்களுக்குச் செலுத்தப்படுகின் றது.

# சர்க்கஸ் பொம்மை

க. ஜெயசீலன்

பாலு... பாலு... 'சங்கர்ராம் சர்க்கஸ்' பட்டணத்திற்கு வந்துவிட்டதே உனக்குத்தெரியாதா? என்று கூறியபடி வகுப்பில் நுழைந்தான் பாபு. கிராமத்தினது எல்லையிலே வசிக்கும் அவன் பட்டணத்துச் சேதிகளைப் பாடசாலைக்குக் கொணரும் ஒரு நிருபர். பட்டணத்திலே நடந்த ஆத்மாராம் கொலைவழக்கைப் பத்திரிகைகளுக்கு முன் பாடசாலையிற் பரப்பி அதன்மூலம் அதைக் கிராமமக்களுக்கு அறியச் செய்த பெருமை அவனையே சாரும். பட்டணத்துக்கு வந்திருந்த சங்கர்ராம் சர்க்கஸ் பற்றிய செய்தியைத்தான் அவன் இப்போது பத்தாவது தடவையாக பாலுவிடம் கூறுகிறுன். அதற்கு ஒரு மாதம் முன்பு பட்டணத்திற்கு வந்த சங்கர்ராம் சர்க்கஸ் மீண்டும் பட்டணத்திற்கு வந்திருந்தது. முதல் முறை வந்தபோது அதைப் பார்த்து மகிழ்ந்த பாபு அதன் சர்க்கஸ் வித்தைகளைப் பாடசாலைப் பிள்ளைகளிடம் சொல்லிச் சொல்லி அவர்களைச் சர்க்கஸ் பித்தர்களாக்கி விட்டான். சர்க்கஸிலே பத்து ரூபாவுக்கு அவன் வாங்கிய சர்க்கஸ் பொம்மைகள் பாடசாலையிலேயே பிரசித்தி பெற்று விட்டன. அன்றும் அவைகளை அவன் பாடசாலைக்குக் கொண்டுவந்தான்.

ஒரு பொம்மையைக் கையில் எடுத்த பாலு அதிலுள்ள ஒரு பொத்தானை அழுத்தினுன். உடனே அப்பொம்மை அது நிறுத்தப்பட்டுள்ள பீடத்திலிருந்து எழும்பிக் குதித்துப் பல கரணங்களைத் தொடர்ந்து அடித்தது. அவன் வேருெரு பொம்மையின் பொத்தானை அழுத்தியதும் அது பல சர்க்கஸ் வித்தைகளைச் செய்தது. அதைப் பார்த்த பாலு தானும் அச் சர்க்கஸ் வித்தைகளைப் பார்க்கப்போகிறேன், சர்ச்கஸ் பொம்மைகளை வாங்கப்போகிறேன் என எண்ணி மகிழ்ந்தான். சர்க்கஸ் வித்தையும் சினிமாவும் பார்க்குமளவுக்கு அவனது குடும்பம் அவ்வளவு வசதிவாய்ந்ததல்ல. நிலத்தை நம்பி உழைத்துப் பிழைப்பவர் அவனது தந்தையார். இவ்வாருன நிலையையுடைய அவன் பத்து ரூபாவுக்குப் பொம்மை வாங்குவதென்ருல்? அவன் அதைப் பற்றிக் கலங்கவில்லை. சில மாதங்களுக்கு முன் பாடசாலைப் பேச்சுப்போட்டியிலே பரிசுபெற்ற அவனுக்குப் பத்து ரூபா பரிசு கொடுத்திருந்தனர். அதை அவனது தாய்தந்தையரும் மறந்துவிட்டனர். பாடசாலையும் மறந்துவிட்டது. ஆனுல் அதை அவன் பத்திரமாக வைத்திருந்தான். அவனது மாமா ஊருக்கு வந்து விட்டுச் செல்லும்போது கொடுத்த பணத்தையும், பாடசாலைக்கு வரும்போது சிலசமயங்களில் அவனது தாயார் கொடுக்கும் பணத்தையும் சேர்த்து வைத்திருந்தான் அவன். சர்க்கஸ் ஐந்து நாட்களுக்கே அங்கு தங்கும். மூன்று நாட்கள் சென்றுவிட்டன. இன்னும் இரண்டு நாட்களே இருக்கின்றன. இன்று அவன் சர்க்கஸ் பார்க்கம்

போகிருன். நாளை அவனும் சர்க்கஸ் பொம்மையைப் பாடசாலைக்குக் கொண்டு வரப்போகிருன். இதை எண்ணிய அவன் நெஞ்சு பூரித்தது.

பாடசாலை விட்டதும் வீட்டை நோக்கி ஓடிஞன் பாலு. வீட்டினுள் நுழையும்போது வட்டிக்கடை வைத்திருக்கும் மோகன்லால் தன் தாயுடன் கதைத்துக்கொண்டிருப்பதைக் கண்டான். அதைக் கவனியாது உள்ளே ஓடிச்சென்று புத்தகத்தை வைத்துவிட்டு சாப்பிட்டுவிட்டு வெளியே வந்தான். அவர்களின் பேச்சு அப்போது அவனுக்குக் கேட்டது. ''மரகதம் நாளைக்கு வட்டிப் பணம் பதினைந்து ரூபாவும் தந்துவிடவேண்டும். ஒரு கிழமைக்கிடையில் கடன் வாங்கிய 500 ரூபாவும் தந்துவிடவேண்டும். இல்லாவிட்டால் இந்த வீட்டைப் பறிமுதல் செய்வேன் ஜாக்கிரதை'' கோபத்தோடு எச்சரித்தான் மோகன்லால். ''நாளைக்குக் கட்டாயம் வட்டிப்பணம் குடுத்துடறேன் சாமி. ஆனல் 500 ரூபாவுக்குத்தான் ஒரு மாதம் தவணைதாருங்க''. அதைச் சொல்லுமட்டும் மோகன்லால் அங்கு நின்றுற்தானே. மரகதம் வீட்டில் நுழைந்தாள். ''அம்மா பட்டணத்தில் சர்க்கஸ்'' கூறிமுடிக்குமுன் ''சர்க்கசுக்குப் போகப் போறியா? வட்டிப் பணம் கொடுக்க எனக்கு லாயக்கில்லை. நீ சர்க்கஸ்சுக்குப் போகப்போறியா? போடா உள்ளே'' இரைந்தாள் மரகதம். பேசாமல் உள்ளே போனன் பாலு. துக்கம் அவன் நெஞ்சை அடைத்தது.

அடுத்தநாள் இன்று எப்படியும் சர்க்கஸ்சுக்குப் போகவேண்டும் என்ற வைராக்கியத்துடன் பாடசாலையிலிருந்து திரும்பிய பாலு வீட்டினுள் நுழைந்தான். சாப்பிட்டுவிட்டு வெளியே வந்தவன் மோகன்லால் உள்ளே நுழைந்ததைப் பார்த்தான். அவன் முகத்திற் கவலைக்குறி படர்ந்தது. உடனே அங்கே வந்த மரகதம் ''சாமி வட்டிப்பணம் இதோ எடுத்தாறேன்'' என்று கூறியபடி உள்ளே நுழைந்தாள். பாலு அவளுக்குப் பின்னுற் சென்றுன். மரகதம் ஒரு சிறு பேணியைத் திறந்தாள். திறந்தவள் அதிர்ந்து நின்றுள். ''பாலு'' ''என்னம்மா'' தாயின் அருகே நின்றபடி குரல் கொடுத்தான் பாலு. இதற்குள்ளே பதினைந்து ரூபா வைத்தேன் காணவில்லையே. ''நான் பாடசாலைக்குப் போனபோது நீங்க தண்ணி அள்ளப் போனியளே அப்ப அப்பா பணத்தை எடுத்தார்'' பணிவுடன் பதில் சொன்னன் பாலு.

'சாமி நாளைக்குக் கட்டாயம் கொடுக்கிறேன் சாமி. வைத்த பணத்தைக் காணலை தேடி எடுத்துக் கட்டாயம் நாளைக்குக் கொடுக்கிறேன்'' கெஞ்சினுள் மரகதம். என்ன என்னை ஏமாற்றுகிருயா? பணம் காணுமற்போனதா வேறு யாரோ வந்தாஞ பணம் எடுக்க. உடனே வை பணத்தைக் கையிலை. கதவுக்குப் பின்னே நின்ற பாலு இதைக்கேட்டான்; உடனே ஓடிப்போய்த் தன் உண்டியலை உடைத்

தான். பணத்தை எண்ணினான். பதினாறு ரூபா அதில் இருந்தது அதில் பதினைந்து ரூபாவை எடுத்துக்கொண்டு போய்த் தன் தாயிடம் கொடுத்தான். அது மோகன்லால் கைக்குச் சென்றது. மோகன்லால் திருப்தியுடன் நடந்து சென்றான். மரகதத்துக்குத் தன் கண்களை நம்ப முடியவில்லை. திரும்பிப் பார்த்தாள். பாலு எதிரே நின்றான். ''நீயாடா எடுத்தாய் பணத்தை'' அதைத் தொடர்ந்து ஓங்கி அவன் கன்னத்தில் ஒரு அறை விட்டாள். அவன் கீழே விழுந்தான். அவன் கண்கள் கலங்கின. அவனால் பேச முடியவில்லை. மரகதம் தன் அவசரத்தை உணர்ந்தாள். அவள் வைத்ததோ பத்துரூபா நோட்டும் ஐந்து ரூபாநோட்டும் பாலு கொணர்ந்ததோ ஒரு ரூபா இரண்டு ரூபா நோட்டுக்கள். அவள் பாலுவைத் தூக்கினாள். அவனைத் தேற்றினாள். ''உனக்கு எப்படியடா இந்தப் பணம் வந்தது'' அவள் சொற்கள் தடுமாறின. ''சர்க்கஸ் பொம்மை வாங்குவதற்குச் சேர்த்தேனம்மா''. நேற்று சர்க்கசுக்கு போகக் கேட்டாயே அதற்காகவா?. என்னிடம் ஒரு ரூபா இருக்கிறது. இன்று போய் சர்க்கஸ் வித்தையைப் பார். ஆறுதலாகப் பொம்மையை வாங்கு என்று கூறியபடி தன் சேலை முடிப்பிலிருந்து ஒரு ரூபாவை எடுத்துக் கொடுத்தாள். பட்டணத்தை நோக்கிப் பாய்ந்து பாய்ந்து சென்றான் பாலு.

ரிக்கெற்றைப் பெற்றுக்கொண்டு உள்ளே சென்றான் பாலு. கூடாரத்தின் மத்தியிலிருந்த அரங்கத்தின் ஒரு பகுதியிலிருந்த சிறுவர்களோடு போய் உட்கார்ந்தான். சைக்கிள்வீரன் சங்கர்ராமின் அதியற்புத சாகஸ விளையாட்டுக்கள், அதன்பின் அந்தரக் கரணங்கள், சிலம்பவிளையாட்டு, மல்யுத்தம். ஊஞ்சலிலே ஆண்களும் பெண்களும் பாய்ந்து பாய்ந்து வீர சாகஸச் செயல்களைச் செய்துகொண்டிருந்தனர். மிருகங்களின் அதி அற்புத சர்க்கஸ் நிகழ்ச்சிகள் கோமாளிகளின் நகைச்சுவை வெடிகள் காற்றிலே கலந்துவரும் பயங்கரப் பின்னணியிசை, நிறநிறமான பல்ப்புகள் அந்த இடத்தையே சொர்க்கபுரி ஆக்கிக்கொண்டிருத்தன. இடையே ஓர் அறிவித்தல் ஒலிபெருக்கியினூடு குழுமியிருந்தவர்களின் காதுகளை வந்தடைந்தது. கடந்த ஒரு மாதகாலமாக விற்கப்பட்ட ரிக்கெற்றுக்களை எடுத்தவர்களில் அதிஷ்டசாலியாத் தெரிவு செய்யப்பட்டவரின் ரிக்கெட் நம்பர் இதோ T.S.0914. எல்லோரும் தங்கள் ரிக்கெற்றுக்களை எடுத்துப்பார்த்தனர். பாலுவின் கண்கள் வியப்பால் விரிந்தன. அவனது ரிக்கெற்றின் இலக்கம் T.S--0914.

சர்க்கஸ் முடிந்தது. முதலாளியின் அறையை நோக்கி ஓடினான் பாலு. தன் டிக்கெற்றைக் கொடுத்தான். அடுத்து ஆயிரம் ரூபாப் பணமுடிப்பு அவன் கையிற் தவழ்ந்தது. வீட்டை நோக்கி ஓடிவந்தான். நடுவழியில் அவன் கைகளை ஒரு உருவம் பற்றியது. அது ஒரு பொலிஸ்காரன். அவன் கையிலிருந்த பையைப் பிடுங்கி உள்ளே பார்த்துவிட்டு அவனைப் பொலிஸ் ஸ்ரேசனுக்கு இழுத்துச்சென்றது அவ்வுருவம்.

அதிகாலை அவன் பொலிஸ் இன்ஸ்பெக்டர் முன் நிற்பாட்டப்பட்டான். சிறிது நேரத்தில் அவனது தந்தையும் அங்கு கொண்டுவரப்பட்டார். இன்ஸ்பெக்டர் அவரை விசாரித்ததிலிருந்து சூதாடிய இடத்தில் பிடிபட்டாரென்று பாலுவுக்குத் தெரிந்தது. அவன் நினைத்திருந்தான் தன் தந்தை என்றாவது இவ்வாருகப் பிடிபடுவார் என்று. அவரை அழைத்துச் சென்றதும் இன்ஸ்பெக்டர் பாலுவிடம் அவனிடமிருந்த ஆயிரம் ரூபாவைப்பற்றி வினவினுர். அவன் நடந்ததைக் கூறினுன். சர்க்கஸ் முதலாளியைப் போனில் விசாரித்தபின் அவனை விடுதலை செய்தனர். வெளியே வந்த அவன் தன் தாயைக் கண்டான். தன்னை இரவு முழுவதும் காணுததால் தன்னைத் தேடித் தன் தாயார் வந்திருக்கிருரென அறிந்தான். நடந்ததைத் தாய்க்குக் கூறியபடி வீடு சேர்ந்தான். போகும் வழியில் ஆயிரம் ரூபா பணத்தில் ஐந்நூறு ரூபா மோகன்லாலிடம் கொடுத்துத் தன் கடனை அடைத்துக்கொண்டாள் மரகதம்.

நீதி மன்றக் கூண்டிலே நின்ருர் பாலுவின் தந்தை. சூதாடியதற்காக அவருக்கு ஐந்நூறு ரூபா அபராதம் விதிக்கப்பட்டது. ஆயிரம் ரூபாவில் மீதிப்பணம் ஐந்நூறு ரூபாவையும் கட்டித் தனது கணவனை விடுவித்து வீட்டுக்கு அழைத்துச்சென்ருள் மரகதம். ''மரகதம் என்னை மன்னித்துவிடு நான் தவருன பாதையிற் சென்றேன். இனி நான் தவறு செய்ய மாட்டேன். உழைத்து இக் குடும்பத்தைக் காப்பாற்றுவேன். இது உறுதி'' என்று கூறிய பாலுவின் தந்தையைத் தாங்கிப் பிடித்த மரகதம் ''எங்கள் வாழ்க்கையை மலர வைத்தவன் பாலு. அவனுற்ருன் நீங்கள் இன்று இப்படியிருக்கிறீர்கள். இல்லாவிட்டால் இப்பொழுது சிறையிலிருப்பீர்கள்'' என்று மரகதம் கூறியதும் மகிழ்ச்சியுடன் பாலுவைத் தூக்கி ஒரு சுற்றுச் சுற்றினுர் அவன் தந்தை. சாகசக் காட்சியிலும் அக்காட்சி சிறந்து விளங்கியது.

* *

## பாரதியார் பிறந்ததால்.....

மகாலிங்கம் இளங்கோவன், நெல்லியடி.

பாரதியின் காலத்தின் பின் தமிழ் நாட்டில் ஒரு புதிய திருப்பம் ஏற்பட்டது. தமிழ் இலக்கியத்தில் ஒரு மறுமலர்ச்சி ஏற்பட்டது. தமிழ் மக்களின் சமுதாய வாழ்வில் புரட்சிக் கருத்துக்கள் வீசின. இக் காரணங்களினுல் இக் காலப்பகுதியைப் ''பாரதி சகாப்தம்'' எனக் கூறுவோருமுளர்.

இதுவரை காலமும் பண்டிதரின் தனி உடமையாக கோபுர மேட்டிலே தவழ்ந்து வந்த தமிழை பாமர மக்களும் படித்தின்புறும் அளவிற்கு அதைக் குப்பை மேட்டிற்குக் கொண்டுவந்த பெருமை பாரதிக்கே உரியது. எளிய நடையில் இலகுவான பதங்களை உபயோகித்து பாப்பா முதல் பாட்டன் வரை சகலரும் படித்தின்புற வேண்டுமென்னும் நோக்கத்துடன் தமிழன்னைக்கு கவிதை மாலை தொடுத்தவர் பாரதி. அவருக்குப் பின் அவரது அடிச்சுவட்டைப் பின் பற்றி பாரதிதாசன், தேசிகவிநாயகம் பிள்ளை போன்ற நூற்றுக் கணக்கான புலவர் பெருமக்கள் கவிதைத் துறையில் பணியாற்றி வருகின்றனர்.

நாட்டுமக்களிடையே பரவியிருந்த மூட நம்பிக்கைகள் தீண்டாமை முதலிய சாபக் கேடுகளையும் சமயப் போர்வையில் தமிழ் நாட்டில் குடிகொண்ட அறியாமையையும் தனது கவிதைகள் மூலம் சாடியவர் பாரதி.

''சாதிகள் இல்லையடி பாப்பா — குலத்
தாழ்ச்சி உயர்வு சொலல் பாவம்''

என்று அஞ்சாது எடுத்துரைத்தவர் பாரதி.

தனது சில உயர்ந்த கவிதைகள் மூலம் நாட்டுப்பற்றை உருவாக்கி இந்திய விடுதலைக்காக உழைத்த தமிழ் மகன் என்ற பெருமையும் பாரதிக்கே உரியது. சிதம்பரப்பிள்ளை. காந்தியடிகள் ஆகியோர் மீது பாடிய பாடல்கள் மூலம் தேசாபிமான உணர்ச்சியை இந்திய மக்களுக்கு ஊட்டினர். நாட்டுக்காக எவ்வித இன்னலையும் ஏற்க ஆயத்தமாயிருக்க வேண்டுமெனப் போதித்தார்.

அக்கிரமம் நிறைந்த ஆட்சிப் பீடத்தைக் கவிழ்த்து மக்கள் விரும்பும் ஆட்சியை நிறுவுவது மக்களின் தலையாய கடன் என்றும் ஜனநாயக தத்துவத்தை அவர் தாம் பாடிய ருஷ்ய நாட்டைப்பற்றிய பாடலில் சுட்டிக்காட்டியுள்ளார் அதே பாடலிற் பொதுவுடமைத் தத்துவத்தின் சிறப்பையும் புகழ்ந்துள்ளார். பொதுவுடமையைப்பற்றி முதன் முதல் தமிழிற் பாடிய பெருமை பாரதிக்கே உரியது.

பாரதியார் பிறந்ததால் இத்தனை நன்மைகளும் மக்களுக்கு ஏற்பட்டுள்ளன!

கடிதக் கட்டுரை:

# "தம்பிக்கு!"

— செல்வி இரா. சரசுவதி —

அன்புள்ள ஆனந்தா!

வண்ணத் தமிழ் வணக்கம். இம்முறை உன் மடல் தாமதித்து விட்டது. காரணத்தையும் கூறி இருந்தாய். ஆமாம்! கல்வியே கண்ணுயிரு என்பது அப்பாவின் வேதவாக்கு. இப்படிப்பட்ட பெற்ருேர் பலர் இருப்பதால்தான், பிள்ளைகளின் பிறநலன்களை - ஒழுக்க நிலைகளைக் கவனிக்கின்ருர்களில்லை. தம் பிள்ளை ஒரு பட்டதாரியாக வந்து விட்டால் போதும் என்ற மனப்பான்மை பலரிடம் இருக்கின்றதனுலேயே நல்ல மாணவ சமுதாயம் உருவாக வழியில்லை. கற்பிப்போரும் இந்நிலையில்தான் கற்பிக்கின்றனர். ஆனந்! கல்வியானது, வாழ்க்கைக்குப் பயன்படத் தக்கதாயும், மன அடக்கத்திற்குரியதாகவும் அமைய வேண்டும். தேவையற்ற கல்வி எதற்கு? இன்று உலகடங்கும் பல்கலைக்கழகம் என்ற ஒன்று நிறுவப்பட்டுள்ளதே, இதைப்பற்றி நீ என்ன நினைக்கின்ருய்? நீயும் ஒரு பல்கலைக்கழக மாணவன் தானே? அதனுல்தான் உன்னிடம் இக்கேள்வியைக் கேட்டுள்ளேன்?

இனி, சந்திரமண்டலப் பிரச்சினைக்கு வருவோம். மனிதன் ஏன் சந்திரமண்டலத்தில் காலடி எடுத்து வைத்தான்? என்பதற்கு நீ தந்துள்ள பதில் கண்டு நகைத்தேன். ம்......! மண்ணிலே மாண்புடன் வாழத் தெரியவில்லையாம். விண்ணிலே போய்த்தானு வாழ்ந்து காட்டப் போகிருர்கள்? எதை? எப்படி? வாழ்ந்து காட்டப் போகிருர்களென்று நீ நினைக்கிருய்? அண்மையில் செய்தித்தாள் ஒன்றில் புகைப்படத்துடன் செய்தியொன்று வெளிவந்ததே, பார்த்தாயா? பயபரா யுத்தத்தின் போது வீதியிலே நாதியற்று – நோயுற்றுக் கிடந்த இபோ இனக் குழந்தைகளின் சோக வாழ்வை, அந்தச் செய்தித்தாளில் கண்ட போது, என் நெஞ்சம் அடைந்த வேதனையைச் சொல்லுந்தரமன்று. இதுதான் நாகரீகமா? இப்பரிதாபக் காட்சி எதனுல் விளைந்தது?

பாவம்! வாழ வசதியற்ற மக்களை நசுக்கி வாழ்வதுதான், யுத்தபலமுள்ள நாடுகளின் நாகரீகமா? ஆம்! அமெரிக்கா சந்திரனில் காலடி எடுத்து வைத்துவிட்டது என்று பெருமை பேசலாம். ஆனுல் இவையெல்லாம் அற்பப் பெருமை என்றுதான் யான் கூறுவேன். இத்தகைய இழி செயல்களைப் பூமண்டலத்தில் புரிந்தது போதாதென்று சந்திரமண்டலத்திலும் பரப்ப மனிதன் முனைகிருன் போலும்! ஆனுல் அஃது முடியாது.

ஆனந்தா! யுத்தம் என்றதும் பாரத- இராமாயண யுத்தங்களைப் பற்றி உரைப்பாய். அந்தளவிற்கு யான் இடம் வைக்கமாட்டேன்.

அதற்கும் விளக்கம் தந்து விடுகிறேன். பாரத - இராமாயண காலத்திலும் மனிதன் யுத்தம் செய்திருக்கிறுன். அக்காலத்திலும் மனிதனிடம் போட்டி - பொருமை - சூழ்ச்சி போன்ற தீய பண்புகளெல்லாம் இருந்திருக்கின்றன. அதனுல் இக்கால மனிதனும் அவ்வழியே நடந்து வருகிறுன் என்று நீ வாதாடலாம். இஃது முற்றிலும் தவறுனது. ஏனெனில், பாரத-இராமாயண யுத்தங்கள் யாம் நிறைய அறிவுரைகளையும், வாழ்க்கைத் தத்துவங்களையும், வாழ்க்கை நெறிகளையும் அறிய வழி வகுத்துள்ளன. தீமையை விலக்கி, நன்மை வழிப்படி நடப்பதற்குத்தான் வரலாறுகள், இலக்கியங்கள் எழுதப்பட்டுள்ளன. அவ்றறைப்பற்றி ஆசிரியர்களும், அறிஞர்களும் கல்லூரிகளும் கலைக்கூடங்களும் எமக்கு எடுத்துரைக்கின்றன.

எடுத்துக்காட்டாக: கோவலன் வாழ்வை இங்கு விளக்கலாமென விழைகிறேன். கோவலன் ஓர் உயர்குடிமகன்; உத்தமமான பத்தினிப்பெண் ஒருத்தியைத் துணைவியாகப் பெற்றவன்; செல்வம் நிறைந்தவன்; சீர்பல பெற்றவன்; சிந்தை மகிழ வாழ்ந்திருந்தான். ஆனல் அவனது கலையுள்ளம் ஆடலழகி மாதவியின் பக்கம் திரும்பியது. கலையை இரசிப்பதோடு அவன் நின்றிருந்தால்...... சரி. ஆனல் அவனது அறிவு மழுங்க, மாதவியின் அழகிலேயே தேனுண்ட வண்டாக மயங்கிக் கிடந்துவிட்டான். விளைவு?... செல்வம் அனைத்தையும் இழந்தான். வீணே கள்வனென்ற பட்டத்தையும் பெற்றுக் கொண்டான். ஆனல் கண்ணகி மட்டும் கற்புச் செல்வியாய் இருந்திராவிட்டால் கோவலன்மீது சுமத்தப்பட்ட பழி என்றும் அழியாப் பழியாகவே முடிந்திருக்கும். அவளின் கற்பின் திண்மை கோவலனுக்கு நேர்ந்த அவப் பெயரை நீக்கியது. இவ் வரலாறினை நீ அறிவாய். இதில் கற்பு, நீதி, புகழ், வீரம் போன்றவற்றைக் காணலாம். இதைத்தான் எம் அறிவிற்கு ஏற்றிச் சிந்திக்கவேண்டுமே அன்றிக் கோவலன் தன் துணைவியை விட்டுப் பிறன்மனை நாடினுன். அதனுல் இக்கால ஆண்களும் அவ்வழியே நடக்கிறுர்கள். இதில் என்ன தவறு? என்று வீண் வாதம் புரிவது மடமையன்றோ?

ஆனந்! இறுதியாக ஒன்று. அழகான சந்திரன், கவிஞர்களின் கற்பனைக்கு ஊற்றுப் போன்றவன்; குழந்தைகளுக்கு இன்பமூட்டுபவன் ஏன்? எல்லோருக்கும் சந்திரன் இன்பம் அளிக்கிறுன் என்றல் மிகையன்று. அத்தகைய சந்திரனின் அழகை மண்மடந்தையின் மடியில் தவழ்ந்து, அள்ளிப் பருக வேண்டுமே அன்றி, விண்ணில் தவழ்ந்து சென்று சந்திரனை ஆராய்ந்து அழகைக் கெடச் செய்வது நன்றன்று. இயற்கையை இரசித்து மகிழ்வதைவிட்டு, அதனை ஆராயப்புகின் அதனழகு குன்றிவிடும். ரோசாமலர்! இம்மலரைப் பார்த்தவுடனேயே அழகான மலர்; மணமுள்ள மலர் என்று தெரியும். ஆனல் அம்மலரை அக்கு வேறு, ஆணி வேறு என்று பிரித்து அழகை இரசிக்க முடியுமா? முடியாது? நீ என்ன கூறுகிறுய்?

மடல் இறுதிக்கட்டத்தை நெருங்கிவிட்டது. ஈழத்துக் குழந்தை இலக்கியம் வளர ஒரு சஞ்சிகை ஆரம்பிக்க வேண்டும் என்ற எனது

எண்ணத்தை நீ ஆதரித்துள்ள அதே வேளையில், ஈழத்தில் மலர்ந்துள்ள ஒன்றிரண்டு இதழ்களை ஆதரித்து, அதன் ஆசிரியர்களுடன் சேர்ந்து மேலும் பல வளர்ச்சிகளைச் செய்வதற்கு உதவிகள் புரிவதே சாலச் சிறந்தது, என்று எழுதியிருந்தாய். இதுவும் நல்லதே! இன்று ஈழத்தில் மூலைக்கொரு இதழாக வெளிவந்து, இறுதியில் இருந்த இடம் தெரியாமல் மறைந்துவிடுகிறது. பல இதழ்கள் வெளிவந்தால் எந்த இதழைத்தான் ஆதரிப்பார்கள்? என்று கேட்டிருந்தாய். இஃதும் உண்மையே! ஆனால் இதற்குரிய காரணம் என்னவென்று நினைக்கிறாய்? சரி. சித்திரைப்புத்தாண்டு அல்லவா என் வாழ்த்துக்கள் உரித்தாகட்டும். பிற பின்.

இவ் வண்ணம்,
அன்புடன் உன் அக்கா,
'ஆனந்தி'

# அவனியின்கண் அரும்பெருஞ் செல்வம் அன்பு!

செல்வி மும்தாஜ் அப்பாஸ், கிருங்கதெனிய.

அன்பிற்கு நிகர் அன்பே. தன்னிகரற்ற அன்பு இல்லையேல் தரணியர் ஒருவர் வாழ்வது கடினம். அகிலத்தார் அனைவரையும் ஒன்று சேர்க்கும் அரும் சக்தி வாய்ந்தது அன்பு. இது ஆன்மாக்களின் தாய்ப் பாலாகக் கருதப்படுகின்றது. அன்பெனும் தேனூற்று அறத்தின் இருப்பிடம்; மங்கள மகிழ்ச்சியின் மணிமுடி. மக்களை மாக்களாக மாற்றும் அறியாமை, பகைமை, அசுரத்தன்மை போன்றவைகளை வேரோடு அழித்து அறிவு, உறவு, அமரத்தன்மை, நல்லொழுக்கம் இவைகளை ஆல்போன்று வளர்க்கும் அமுதமே அன்பு. அழிவிலா அன்பே மதம், சிறந்த பண்பாடு, இன்ப வாழ்வு என்பவற்றின் மகத்துவம் மிக்க இரகசியமாக விளங்குகின்றது. அன்பே உலகின் கண். மானிட வாழ்வின் உயிர்நாடி.

கருணையெனும் தேனன்பு இதயத்திற் சுரக்கும் வேளை அகமும் மலர்கின்றது. அகத்தில் சூழ்ந்துள்ள இருளையகற்றி ஒளிச்சுடரைப் பரப்பும் அன்பை ஒவ்வொருவரும் தம் கண்களாகக் கருதவேண்டும். அன்பு எல்லையற்ற ஆழியைப் போன்றது. இது வாழ்விற் பெருகினால் இன்னல் இன்பமாகும். இடர்கள் வெற்றியின் முதற்படியாக மாறும்.

உலகம் அன்பின் ஆலயமாகப் புனிதமடையும். அன்பெனும் செல்வத்தை உறுதுணையாகக் கொண்டால், எல்லாம் பெற்று ஈடிணையற்று இன்புற்று வாழலாம்.

மானிட வர்க்கத்தினிடையில் இனம், மதம், பகை இவைகளினின்றும் இணைக்கும் கருவி ஒன்று உள்ளதென்றால் அது அன்பே. இந்தப் புனித அன்பே அமலனையடைய வழிவகுக்கின்றது. இந்த அரியசக்தியே அகந்தை, பேராசை, வஞ்சகம் போன்ற தீயகுணங்களை அடியோடகற்றி விடுகின்றது. அனைவரையும் சூழ்ந்துள்ள அஞ்ஞான இருளையகற்றி மெஞ்ஞானத்தை உணர்த்துகின்றது. அன்பு அறமாகி அவனியிற் பவனி வரும்வேளை அருளாகச் சுடர்விடும். அன்பு பரம்பொருளை அறிய இனிய சாதனமாக உத்தம ஆசானுக உதவிபுரிகின்றது.

பாரை நோக்குமிடத்து அன்பு குன்றியிருப்பது தெட்டத்தெளிவாகின்றது அறியாமையென்னும் இருள் வையகமெங்கும் வியாபித்துள்ளது. எங்கும் போட்டி, பொருமை, போர் தாண்டவமாடுகின்றன. நற்செயல், ஒழுக்கம், மதம் நம்மிடையே நசுக்கி ஒதுக்கப்பட்டுள்ளன. கொலை, கொள்ளை விளையாட்டாகக் கருதப்படுகின்றது. செல்வத்துட் செல்வமான இவ்வருட் செல்வம் குன்றி வருவதே இதற்கு முக்கிய காரணம்.

வருந்தத் தக்க இந்த இழிநிலை மாறி அன்பின் இன்ப நிலை, அருள்நிலை உதயமாகிப் பூலோகம் சுவர்க்கமாகச் சுடர் விடுவதற்கு நாம் நமதுள்ளத்தில் அன்பை நிலைநாட்ட வேண்டும். சொல்லிலும் செயலிலும் அன்பு மணம் கமழச் செய்தல் வேண்டும். எவ்வுயிரையும் எம்முயிராக எண்ணி வாழப் பழகவேண்டும். பகைவருக்கும் முதியோருக்கும் அன்பு காட்டவேண்டும். மாணவர்கள் கட்டாயம் தம் இள உள்ளங்களிலே அன்பை நிலைநிறுத்தவேண்டும்.

மாணவ சகோதரர்களே! என்றும் நாம் புனித அன்பை உறுதுணையாகக் கொண்டு அறத்தை நிலைபெறச் செய்வோமாக. அன்பு வாழ்க!

## மாணவர் மன்ற அங்கத்தவர்

83. சி. பத்மநாதன், சிவாநந்த வித்தியாலயம், மட்டக்களப்பு.

# பேனா நண்பர் சங்கம்

உலகத்தின் பலபாகங்களிலு முள்ளவர்களைக் கடிதமூலம் அறிந்துகொள்ளவும், ஒருவர் கஷ்டத்தை மற்றவரிடம் கூறி ஆறுதல் கொள்ளவும், நல்லவர் உறவைப் பெறவும், தங்கள் தங்கள் கருத்துக்களைப் பரிமாறிக்கொள்ளவும் இச்சங்கம் உதவியாக இருக்கும்.

1. சங்கத்தில் சேர 50சத முத்திரை / போஸ்ரல் ஆடர் அனுப்புக.
2. பெயர், முகவரி, வயது இவற்றைவிட அறிந்த பாஷைகள், விளையாட்டுக்கள், பொழுதுபோக்குகள், மற்றும் திறமைகள் ஆண், பெண் இருபாலாரும் கடிதம் எழுதலாமா என்ற விபரங்களை 25 சொற்களுக்கு மேற்படாது எழுதி அனுப்பவும்.
3. தோழர் தோழர்களுக்கும், தோழியர் தோழியர்களுக்குமே எழுதலாம். ஆனால் இருபாலாரும் எழுதலாம் எனக் குறிப்பிடின் எவரும் எழுதலாம்.
4. வயதுக் கட்டுப்பாடின்றி உலகத்தின் எப்பகுதியிலுள்ளவரும் சேரலாம்.
5. தங்கள் புகைப்படங்களை இப்பகுதியில் வெளியிட விரும்புகிறவர்கள் புளக் (Block) அனுப்பவேண்டும். புளக் இல்லாவிடில் புளக்செய்ய புகைப்படத்துடன் ரூ: 7-50 அனுப்பவேண்டும்.

**வெற்றிமணி, 253 1/1 ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.**

# வெற்றிமணி மாணவர் மன்றம்

மாணவர் மன்றத்தில் 22 வயதுக்குட்பட்ட ஆண், பெண் இருபாலாரும் சேரலாம். பாடசாலையிற் படிப்பவர்கள் வயதுக் கட்டுப்பாடின்றிச் சேரலாம். விண்ணப்பத்துடன் 50சத முத்திரை அல்லது போஸ்ரல் ஆடர் பிரவேசக் கட்டணமாக அனுப்பவேண்டும். தமிழகத்திலுள்ளவர்கள் வெற்றிமணியிலுள்ள தமிழகப் பிரதிநிதியின் முகவரிக்கு அனுப்புக.

## அங்கத்தவர் விண்ணப்பப் பத்திரம்

அன்புள்ள மணி மாமாவுக்கு,

மாணவர் மன்றத்தில் என்னை அங்கத்தவராகச் சேர்க்கவும்.

செல்வன் / செல்வி ........................................

பாடசாலை முகவரி ........................................

வீட்டு முகவரி ........................................

பிறந்த திகதி .................... வயது .................... வகுப்பு ....................

கடிதத்தொடர்பு ஆண், பெண் இருபாலாரும்.

........................................ ........................................

ஆசிரியர் / பெற்றோர் கையொப்பம் கையொப்பம்

இலங்கையிற் செய்திப் பத்திரிகையாகப் பதியப்பட்டது. QB 3033


கீரிமலையினிலே — நலந்தரும்
கேணியருகினிலே
மாரி மழையதனுல் — மலர்ந்தெழும்
மண்ணினைப் போலவுள்ளம்

பூரித்து நிற்கையிலே — நினைவுகள்
பூத்துக் குலுங்கையிலே

நடந்தது என்ன?

அறிய வேண்டுமா?

படித்துச் சுவையுங்கள்

கவிஞர் வி. கந்தவனம் அவர்களின்

-*- கீரிமலையினிலே -*-

**கற்பனை நயமும்**
**சொற்பொருள் வளமும் மிகுந்த**
**உன்னத காவியம்!**

விலை ரூபா 2/-

தனலக்குமி புத்தகசாலை,
சுன்னுகம்.


இப் பத்திரிகை, சக்தி அச்சகத்தினருக்காக, பொன். இராசரத்தினம் அவர்களால் யாழ். ஸ்ரான்லி வீதி, 253 1/1 இலக்கத்திலுள்ள சக்தி அச்சகத்தில், 15-4-70இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.